www.tamilarangam.net

கறுப்பு

தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 038

17 செப்டம்பர் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# பழ.நெடுமாறன், வைகோ போன்றோரை இழிவுபடுத்தும் கே.பி.ரெஜி!!! பரபரப்பான ஒலிப்பதிவு அம்பலம்

இந்தியாவின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் கே.பி.ரெஜி அல்லது அறிவன் என்றழைக்கப்படும் காந்தலிங்கம் பிரேம்ரெஜி, தமிழகத்தில் தமிழீழ மக்களுக்காகக் குரலெழுப்பி வரும் வைகோ, நெடுமாறன் ஆகியோரை இழிவுபடுத்தும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் தலைமையில் ஆயுத எதிர்ப்பியக்கமாகத் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்ற நாள் முதல், தமிழீழ தேசியத் தலைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ தேசத்திற்கும் உறுதுணையாக விளங்கும் தமிழகத் தலைவர்களில் முன்னோடியாக பழ.நெடுமாறன் அவர்கள் திகழ்கின்றார். இதேபோன்று தமிழீழ தேசியத் தலைவரின் அன்பையும், பாராட்டையும், மதிப்பையும் பெற்ற இன்னுமொரு முதன்மைத் தமிழகத் தலைவராக வைகோ அவர்கள் விளங்குகின்றார்.

இந்தியாவின் அடக்குமுறை சட்டங்களுக்கு அடிபணியாது, தமிழக மண்ணில் இருந்தவாறு மிகவும் துணிச்சலுடன் தமிழீழ தேசிய விடுதலைக்காகக் குரலெழுப்பி வரும் இவர்கள் இருவரும், தமிழீழ மக்களுக்காகப் பல தடவைகள் சிறைசென்றதோடு, தமது அரசியல் வாழ்வையும் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

இவர்கள் இருவரையும் கீழ்த்தரமாக விமர்சித்து காகிதப்புலி இராமு.சுபனுடன் தொலைபேசியில் ரெஜி உரையாடிய பொழுது எமது ஊடகப் புலனாய்வாளர்களால் ஒட்டுக்கேட்கப்பட்ட ஒலிப்பதிவு வடிவம், தற்பொழுது எமது ஆசிரியர் பீடத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தியாவைக் கடுமையாக விமர்சித்து பழ.நெடுமாறன், வைகோ ஆகியோர் அறிக்கைகளை வெளியிடுவது ஒரு பொறுப்பற்ற செயல் என்று குறிப்பிடும் ரெஜி, இவ்வாறு அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என்று தாங்கள் ஏற்கனவே இவர்கள் இருவரிடமும் கூறியதாகவும் எனினும் தமது சொல்லுக்கு இவர்கள் கீழ்ப்படியவில்லை என்றும் தெரிவிக்கின்றார்.

2002ஆம் ஆண்டிலிருந்து பல நாடுகளுக்கு சென்று வந்தவர் என்ற வகையில் தனக்குப் பல விடயங்கள் தெரியும் என்றும், அப்படிப்படி தனக்கே பழ.நெடுமாறன் விளக்கம் கொடுக்க முற்படுவதாகவும் ரெஜி கூறுகின்றார். தான் ஒரு போராளி என்று கூறி, தன்னை ஒரு பெரும் இராசதந்திரியாக கற்பனை செய்து கொள்ளும் ரெஜி, தனது வாழ்நாளில் ஒரு நாள்கூட களத்திற்கு சென்றதில்லை. யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை முடித்து விட்டு 1995ஆம் ஆண்டு இயக்கத்திற்கு வால் பிடித்த ரெஜி, இளம்பரிதி, பாப்பா ஆகியோர் போன்று ஐஸ் அடித்து தனது வயிற்றை வளர்த்துக் கொண்ட ஒருவர். ஒரு வெறும் கற்றுக்குட்டியாக இருக்கும் இவருக்கு, பழ.நெடுமாறன், வைகோ போன்றோரை விமர்சிப்பதற்கு என்ன தகுதி உள்ளது? உறவுகளே சிந்தியுங்கள். இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக கே.பி.ரெஜியின் உரையாடலின் ஒலிவடிவத்தை இணைத்துள்ளோம்.



இதே தொனியில் பழ.நெடுமாறன், வைகோ ஆகியோரை விமர்சித்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கே.பி என்றழைக்கப்படும் தம்பியையா செல்வராஜா பத்மநாதன் செவ்வி ஒன்றை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பணத்தை சுருட்டி கள்ளக் கணக்கு காண்பிக்கும் தனம்

சிங்கள - இந்திய அரசுகளின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் காகிதப்புலி இராமு.சுபனின் கைப்பாவையாக செயற்படும் காகிதப் புலித் தொழிலதிபர் தனம், பிரித்தானியாவில் இடம்பெறும் நிகழ்வுகள் ஊடாகக் கிடைக்கப் பெறும் மக்களின் பணத்தை, கள்ளக் கணக்கு காண்பித்து சுருட்டி வருவது தொடர்பான நம்பகமான தகவல்கள் கறுப்பிற்கு கிடைத்துள்ளன.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற விளையாட்டு விழா ஒன்றுக்கு தனது குழுவினருடன் சென்ற தொழிலதிபர் தனம், சகல பணத்தையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு அங்கிருந்த தேசிய செயற்பாட்டாளர்களை மிரட்டி, பணத்தைக் கையகப்படுத்திச் சென்றதாக எமது ஊடகப் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(2ம் பக்கம் பார்க்க...)

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

www.tamilarangam.net



# தனத்தின் அத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்துலக உயிரோடை தமிழ்

ஏ.சீ.தாசீசியஸ் என்றழைக்கப்படும் அல்போன்ஸ் குமரன் தாசீசியஸ் அவர்களால் தொடங்கப்பட்ட அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியின் முழு நிர்வாகமும் தனத்தின் அத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருப்பதாக கறுப்பிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

தமிழ்த் தேசிய ஊடகங்களை காகிதப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, சிங்கள - இந்திய அரசுகளின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்க வைப்பதற்கான முயற்சிகளில் காகிதப்புலித் தொழிலதிபர் தனம் ஈடுபடுவது தொடர்பாக ஏற்கனவே எமது கடந்த இதழ்களில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்நிலையில் தற்பொழுது அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியின் பணிப்பாளராக தனத்தின் அத்தான் ஜோச்சியாம்பிள்ளை இருதயானந்தன் பதவியேற்றிருப்பதாக, அங்கு தொழில்நுட்பக் கலைஞராகப் பணியாற்றி வரும் எமது ஊடகப் புலனாய்வாளர் அறியத்தந்துள்ளார்.



கடந்த யூலை மாதம் 23ஆம் நாளன்று காதும் காதும் வைத்தாற் போன்று இந்தப் பதவியேற்பு இடம் பெற்றதாகவும், இதனால் அதிருப்தியடைந்த ஏ.சீ.தாசீசியஸ், வானொலியை விட்டு வெளியேற முற்பட்ட பொழுது, அவருடன் சமாதானம் செய்து மீண்டும் அவரை வானொலியில் இயங்க வைப்பதில் தனம் வெற்றிகண்டதாகவும் தெரிய வருகின்றது.



இவை தொடர்பான ஆதாரங்கள் விரைவில் எமது ஊடகப் புலனாய்வாளர்களால் எமது ஆசிரியர் பீடத்திடம் கையளிக்கப்படும்.

# முன்னாள் போராளிகள் கவனத்திற்கு!

புலம்பெயர்ந்து வாழும் முன்னாள் போராளிகள் அனைவரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலமிது. இலங்கைத்தீவை விட்டு வெளியேறி தலைமறைவு வாழ்வை வாழும் உங்கள் துன்பம் நாமறிவோம். வீதிகளிலும் கிடைக்கும் இடங்களிலும் படுத்தும், கிடைப்பவற்றை உண்டும் படும் துயரம் சொல்லமுடியாது. விடுதலைக்காக உயிரையும் கொடுக்க முன்வந்த உங்களுக்கு இவை பெரிதல்ல. நீங்கள் படும் இந்தத் துன்பங்களை எதிரி பயன்படுத்த முனைகின்றான். அந்தவகையில் உங்கள் கஸ்டங்களை போக்குவதாக போக்குக்காட்டி நல் வாழ்வு பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து எதிரியின் கைகளில் உங்களை ஒப்படைக்கின்றான் அல்லது எதிரிகளுடன் ஒத்துழைக்கும் ஆளாக உங்களை மாற்றி விடுவான். இலண்டனில் எரிபொருள் நிலையத்தில் வேலை, சுப்பமாக்கற்றில் வேலை அல்லது பாதுகாப்பான ஆபிரிக்க நாட்டிற்கான விசாவை பெற்றுத்தருகின்றோம் என உங்களிடம் கதையளப்பார்கள். போக்குக்கு சிலரை அனுப்பிவிட்டு முக்கிய போராளிகளை எதிரிகளிடம் காட்டிக்கொடுத்து விடுவார்கள். எனவே இப்படியான பேர்வழிகள் தொடர்பாக விழிப்பாக இருக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிள்றோம். உங்கள் பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(மக்கள் பணத்தை ...)**

இதன்பொழுது அங்கிருந்த கூடாரம் ஒன்றை ஆக்கிரமித்துக் கொண்ட தொழிலதிபர் தனத்தின் அடியாட்கள், விழாவின் செலவிற்கு பணம் வழங்க மறுத்தால், இவர்களுக்கும், தேசிய செயற்பாட்டாளர்கள் சிலருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதாக தெரிய வருகின்றது. இதனை அடுத்து தமது கூடாரத்தை வெறுமையாகக் கைவிட்டு அங்கிருந்து தேசிய செயற்பாட்டாளர்கள் வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையே விளையாட்டு விழாவில் கொட்டகைகளை அமைப்பதற்கு தேசிய செயற்பாட்டாளர் ஒருவரின் வணிக நிறுவனத்தில் இருந்து கூடாரங்களை வாடகைக்கு எடுத்த தொழிலதிபர் தனம், பின்னர் நட்டக் கணக்குக் காண்பித்து, கூடாரங்களுக்கான வாடகைப் பணத்தை செலுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பதாக தெரிய வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்